# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2005 / 2006
## HELD IN APRIL – 2006

## GGY 1.21 – Introduction to Practical Geography

**முதலாம் வினாவுக்கும், ஏனைய வினாக்களுள் நீர் விரும்பிய மூன்று வினாக்களுக்கும் விடையளிப்பதுடன், எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

Time : 03 Hours

இலங்கையின் இடவிளக்கப்படம், விமானப்படம், இலங்கைப் புறவுருவப்படம், வரைதுற்தாள், வரைபுத்தாள் என்பன வழங்கப்படும். இடவிளக்கப்படம், விமானப்படம் என்பன மீண்டும் கையளிக்கப்படல் வேண்டும். கணிப்பான்களையும், கையடக்கத் தொலை பேசியையும் பாவிக்க அனுமதியில்லை. எழுத்துத் தெளிவில்லாத விடைத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்.

01. அ) பின்வரும் அளவுத்திட்டங்களை நேர்கோட்டு அளவுத்திட்டங்களாக மாற்றியமைக்குக.

i) ஒரு சென்றி மீற்றர் சமன் 25,000 சென்றி மீட்டர்.

ii) ஒரு சென்றி மீட்டர் சமன் 50,000 சென்றி மீற்றர்.

iii) ஒரு சென்றி மீட்டர் சமன் 05 கிலோ மீற்றர்.

iv) இரண்டு சென்றி மீற்றர் சமன் 1.0 கிலோ மீட்டர்.

v) நான்கு சென்றி மீற்றர் சமன் 16.0 கிலோ மீட்டர்.

ஆ) i) அளவுத்திட்டம் 1:100,000 என அமைந்திருக்கும் படமொன்றில் இடம்பெறும் 5x 5 சென்றி மீற்றர் சதுரமொன்றின் பரப்பினைக் ஹெக்டயரில் கணிக்குக.

ii) 16 சதுர அங்குலச் சதுரமொன்று 400 சதுரமைல்களை பிரதிநிதித்துவம் செய்யும் படமொன்றின் அளவுத்திட்டத்தினைக் கணிக்குக.

iii) 3" x 3" சதுர அங்குல சதுரமொன்று 81 சதுர மைல்களைக் காட்டுமாயின் அப்படத்தின் அளவுத்திட்டத்தைக் கணிக்குக.

iv) 9 சதுர அங்குலம் சதுரமொன்று 576 சதுரமைல்களைக் காட்டுமாயின் அப்படத்தின் அளவுத்திட்டத்தைக் காண்க.

02. இலங்கை (1 : 50,000 அப்புத்தளை) என்ற இடவிடக்கப்படம் ஒன்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தினை 1 : 100,000 என்ற அளவுத்திட்டத்திற்கு ஏற்ப பௌதிக அம்சங்களை வரைந்து விளக்குக.

03. வழங்கப்பட்டுள்ள 1 : 50,000 அப்புத்தளை இடவிளக்கப்படத்தில் காட்டப்பட்டுள்ள பொதுமைப்படுத்தப்பட்ட சமவுயரக் கோட்டு நிலவுருவங்களையும் புள்ளி நிலவுருவங்களையும் பொருத்தமான புனையா வரைபடங்களின் உதவியுடன் குறிப்பிடத்தக்க நிலவுருவங்களை விளக்கி ஆராய்க.

(தொடர்......2ல்)

04. இலங்கை இடவிளக்கப்படங்களை சிறப்பித்தல், பெருப்பித்தல் தொடர்பான வேறுபட்ட முறைகளைக் குறிப்பிட்டு அவற்றின் இரண்டு வரைப்பட முறைகளை விளக்குக.

05. அட்டவணை ஒன்றில் தரப்பட்டுள்ள இலங்கை மாவட்ட புறவுருவப்படத்தை ஏதாவது இரு நுட்பமுறையினைப் பயன்படுத்தி இரு வேறுபட்ட புள்ளி விபரவியல் படங்களை வரைந்து பரம்பியல் வேறுபாடு பற்றி கருத்துரைக்குக.

06. அட்டவணை இரண்டில் தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் அம்சங்களை கணிப்பீடு செய்க.

i) சராசரி விலகல் அட்டவணை ஒன்றினை தயாரிக்குக.

ii) சராசரி விலகல்களை கணிப்பிடுவதுடன், சராசரி விலகல் வரைபடம் ஒன்றினை தயாரிக்குக.

iii) உம்மால் பெறப்பட்ட முடிவுகளை விமர்சிக்குக.

07. அ) விமான ஒளிப்படப் பகுதிகள் வரைபடமொன்றில் காட்டப்பட்டுள்ளது. இவ்வரைபடத்தினைப் பயன்படுத்தி பின்வருவனவற்றிற்கு விடை தருக.

i. விமானப்படம் பிடிக்கப்பட்ட நேரம்

ii. சாய்வும் சாய்வின் திசையும்

iii. ஒளிப்படக் கருவியின் ஒன்று திரட்டிய பாய்ச்சின் தூரம்

iv. விமான ஒளிப்படம் எடுக்கப்பட்ட ஆண்டு

v. விமான ஒளிப்படத்தின் தொடரிலக்கம்

vi. விமான ஒளிப்படத்தில் காட்டப்பட்டுள்ள உள்ளடக்கப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பின் அளவு.

ஆ) இலங்கையின் படவரைகலை வரலாற்றினைப் பொறுத்தவரையில் இடவிளக்கப்படங்கள், விமானப் படங்கள், செய்மதிப்படங்கள், புள்ளிவிபரவியல் படங்கள் போன்றவைகள் முக்கியம் பெறுகின்றன. இவைகளில் விமான ஒளிப்படங்களுக்கும் இடவிளக்கப்படங்களுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை உதாரணங்களுடன் தெளிவாக விளக்குக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் <u>இரண்டிற்கு</u> சிறுகுறிப்புரை எழுதுக.

i) மெட்றிக் படங்களும், ஓரங்குலப்படங்களும்

ii) கணனி படவரைகலையியல்

iii) புள்ளிவிபரவியல் படங்களின் பயன்பாடு

iv) விமானம் பறக்கும் உயரமும் குவியத் தூரமும் (வரைபடம் )இன் துணைகொண்டு விளக்குக.)

(தொடர்......3ல்)

## அட்டவணை – II

மட்டக்களப்பின் வருடாந்த மழைவீழ்ச்சி (மில்லி மீற்றரில்) 1960 - 1989

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1960 | 2300 | 1968 | 865 | 1975 | 1476 | 1983 | 922 |
| 1961 | 2409 | 1969 | 1832 | 1976 | 1590 | 1984 | 2314 |
| 1962 | 2036 | 1970 | 1941 | 1977 | 1620 | 1985 | 1632 |
| 1963 | 2897 | 1971 | 1583 | 1978 | 1531 | 1986 | 1628 |
| 1964 | 1649 | 1972 | 1563 | 1979 | 1847 | 1987 | 1361 |
| 1965 | 2014 | 1973 | 1482 | 1980 | 9090 | 1988 | 1251 |
| 1966 | 2209 | 1974 | 1112 | 1981 | 1017 | 1989 | 1200 |
| 1967 | 2121 | | | 1982 | 1301 | | |

(Long – term hydrometereological Data in Sri Lanka 1995)

## அட்டவணை - I

இலங்கையின் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களினது 1981 ஆம் ஆண்டிற்கான இனரீதியான சனத்தொகைத் தொகுப்பு.

| மாவட்டங்கள் | சிங்களவர் | இலகைத் தமிழர்கள் | இந்தியத் தமிழர்கள் | இலங்கை முஸ்லிம்கள் |
|---|---|---|---|---|
| கண்டி | 778,801 | 52,791 | 98,431 | 109,779 |
| மாத்தளை | 285,354 | 20,579 | 24,912 | 24,995 |
| நுவரெலியா | 254,375 | 76,449 | 257,478 | 12,163 |
| பதுளை | 443,024 | 37,520 | 129,498 | 26,600 |
| இரத்தினபுரி | 677,510 | 19,904 | 84,740 | 13,791 |
| கேகாலை | 588,581 | 15,074 | 45,752 | 34,389 |

மூலம் : Census Report 1981

*****